ஆசிரியர்களுக்கு ஓய்வு ஊதியம்.

*** 157 வினா.—திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஆசிரியர்கள் ஓய்வு பெற்றவுடன், அடுத்த நாளே ஓய்வு ஊதிய அனுமதியை வெளியிடும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : ஆசிரியர்கள் ஓய்வு பெற்றதற்குப் பின்னாலே ஓய்வூதியத்தைப் பெற நீண்ட நாட்கள், ஆண்டுகள் ஆகின்றன. அதைத் தவிர்க்க ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா என்பதுதான் மூலக் கேள்வி. ஓய்வு பெற்ற மறுநாள் என்று இல்லாவிட்டாலும்கூட, அதற்கு ஒரு காலக் கெடுவை நிர்ணயித்து அதற்குள்ளே வழங்க வேண்டும் என்ற ஆணையை அரசு பிறப்பிக்குமா ? அடுத்து, மாவட்ட அளவிலே ஓய்வூதியத்தை வழங்கும் திட்டத்தை அரசு பின்பற்ற இருப்பதாக சென்ற முறை அறிவிக்கப்பட்டது. அது நடைமுறைக்கு வந்துவிட்டதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : முன்பு ஏ.ஜி. முதலிலே ஆய்வு செய்ய வேண்டும் என்ற முறை இருந்தது. அதனால் ஓய்வு பெற்றவர்கள் ஓராண்டு, இரண்டாண்டுகள் காலம் வரையில் ஓய்வூதியத்தைப் பெறாமல் கஷ்டப்படுகிற நிலைமை இருந்ததால், மாவட்ட அளவிலே தருகிற கருத்து பரிசிலனை செய்யப்பட வேண்டும் என்று அப்போது சொன்னோம். ஆனால் இன்றைக்கு எடுத்திருக்கிற முடிவின்படி கீழ்க்கண்ட ஓய்வூதியம் வழங்கும் அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர் :—

பள்ளிக் கல்வி இயக்குநர், இணைப் பள்ளிக் கல்வி இயக்குநர் ஆகியோருக்கு அரசு வழங்குகிறது.

முதன்மைக் கல்வி அதிகாரி, துணை இயக்குநர் ஆகியோருக்கு ஓய்வூதியம் வழங்கும் அதிகாரியாக பள்ளிக் கல்வி இயக்குநர் இருக்கிறார்.

மாவட்டக் கல்வி அதிகாரி வரை மற்றும் பதிவுபெற்ற தலைமை ஆசிரியர்கள் உட்பட சார்நிலையில் உள்ள அதிகாரிகளுக்கு—இணைப் பள்ளிக் கல்வி இயக்குநரும் (பணி), பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் உள்ள

1981 மார்ச் 24]

'சி' மற்றும் 'டி' பிரிவு அலுவலர்களுக்கு துணை பள்ளிக் கல்வி இயக்குநர் (இடைநிலை) ஆகியோரும் ஓய்வூதியம் வழங்கும் அதிகாரிகளாக இருக்கிறார்கள்.

தலைமை ஆசிரியர்கள், பள்ளித் துணை ஆய்வாளர் உட்பட நிலை 1, 2, பள்ளி உதவியாளர்கள், மொழி பண்டிதர்கள், 'ஏ' பிரிவு பள்ளிகளில் வேலை செய்யும் நிலை-1 மற்றும் சிறப்பறிஞர் ஆசிரியர்கள், எல்லா உதவியாளர்கள், சார்நிலை அலுவலர்கள், பள்ளிகளிலுள்ள தலைமை எழுத்தர்கள், கன்காணிப்பாளர்கள் 'பி' பிரிவு அரசினர் உயர்நிலைப் பள்ளிகளில் பணி புரியும் அலுவலர்கள் (ஆசிரியர்களும், ஆசிரியரல்லாதாரும்) இடைநிலை மொழி பண்டிதர்கள் நிலை-2, மற்றும் இதர சிறப்பறிஞர் ஆசிரியர்கள், 'ஏ' பிரிவு பள்ளிகளில் வேலை செய்யும் இரண்டாம் நிலை ஆசிரியர்களும், இடைநிலை உதவியாளர் வரை முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகத்தில் வேலை செய்யும் அலுவலர்கள் ஆகியவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் அதிகாரியாக முதன்மைக் கல்வி அலுவலர் இருக்கிறார்.

மாவட்டக் கல்வி அலுவலர் மற்றும் துணை பள்ளி ஆய்வாளர் அலுவலகம் போன்றவைகளில் பணிபுரியும் அலுவலர்கள் ஆகியவர்களுக்கு மாவட்டக் கல்வி அதிகாரி/மகளிர் பள்ளி ஆய்வாளர்கள்/ஆங்கிலோ-இந்தியப் பள்ளி ஆய்வாளர் ஆகியோரும் பஞ்சாயத்து ஒன்றியம் மற்றும் நகராட்சி பள்ளிகளில் பணி செய்யும் ஆசிரியர்களுக்கும் ஏனைய அலுவலர்களுக்கும் மாவட்டக் கல்வி அதிகாரியும் நகராட்சி பெண்கள் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் ஏனைய அலுவலர்களுக்கும் மகளிர் பள்ளி ஆய்வாளரும். அரசினரால் எடுத்துக்கொள்ளப்பட்ட நகராட்சி பள்ளிகளில் பணிபுரிபவர்களுக்கு முதன்மைக் கல்வி அலுவலரும் அங்கீகரிக்கப்பட்ட அரசு உதவிபெறும் பள்ளிகளில் பணிபுரிவோர்களுக்கு மாவட்டக் கல்வி அதிகாரி/மகளிர் பள்ளி ஆய்வாளர்/ஆங்கிலோ-இந்திய பள்ளி ஆய்வாளர் ஆகியோரும் ஓய்வூதியம் வழங்கும் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. பா. ரா. தாமஸ் : இப்போது கல்வி நிலையங்களில் பணியாற்றக்கூடிய ஆசிரியர்கள் ஓய்வு பெறுவதற்கு இரண்டாண்டுகள் முன்னதாகவே விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. கல்வித் துறையிலே இவ்வளவு ஆண்டுகள் பணியாற்றிய ஆசிரியர்களுக்கு இவ்வளவுதான் ஓய்வூதியம் தரப்படும் என்று நிர்ணயிக்கக் கூடிய விவர அட்டையைத் தயாரித்துவிட்டால், ஊதிய விகிதத்திலே மாறுபாடு இல்லாமல் இருந்தால், தாங்கள் இவ்வளவுதான் பெறுவோம் என்று திட்டவட்டமாக ஆசிரியர்களும் அறிந்துகொள்ள முடியும். அந்த வகையிலே செய்யக் கூடிய முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஓய்வு பெற்றதற்குப் பிறகு பல ஆண்டுகளாக ஓய்வூதியத்தைப் பெறாத நிலைமை முன்பு இருந்து வந்தது. நாங்கள் கடந்த மூன்று ஆண்டுக் காலத்திலே எடுத்த சில நடவடிக்கைகளின் காரணமாக இது குறைந்திருக்கிறது. மேலும் இப்போதும் சிறு சிறு முயற்சிகளைச் செய்து கொண்டிருக்கிறோம். ஓய்வுபெற்ற மறுநாளே அவர் களுக்குச் சம்பளம் போல் ஓய்வூதியத்தை வழங்க வேண்டும் என்பதுதான் நம்முடைய நோக்கம். அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மீண்டும் பரிசீலித்து எடுப்போம்.

Officials of Jails under suspension.

* 158. *Q.*—THIRU E. S. VENKATESAN : Will the Hon. the Minister for Co-operation and Law be pleased to state—

(*a*) the number of Superintendents of Jail, Jailors, Head Wardens, etc., of the Jail Department who are under suspension, pending departmental enquiry ; and

(*b*) the period they have been under suspension ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) 1—1—1981-ன் நிலவரப்படி—

1. சிறைக் கண்காணிப்பாளர்கள்	1
2. சிறை அலுவலர்கள்	2
3. உதவி சிறை அலுவலர்கள்	2
4. முதன்மைத் தலைமைக் காவலர்	1
5. முதல் நிலைக் காவலர்கள்	2
6. இரண்டாம் நிலைக் காவலர்கள்	71
7. நன்னடத்தை அலுவலர்கள்	2
8. உதவியாளர்	1
9. இளநிலை உதவியாளர்	1
10. சமையல் ஆள்	1
மொத்தம் . .	84